தமிழ்நாடு அரசு–இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயம்

வியாசர்பாடி, சென்னை – 600039.

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு

சென்னை–26, வடபழநி, அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலின் உப அறநிறுவனமான சென்னை–39, வியாசர்பாடி அருள்மிகு கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடாலயத்தில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப் பணியிடங்களுக்குத் தகுதியுள்ள இந்து மதத்தினைச் சார்ந்தவர்களிடமிருந்து 20.06.2025 முதல் 19.07.2025 வரை அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் விவரம் | ஊதிய விகிதம் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1 | எழுத்தர் | PAY MATRIX – 16<br>15700/– to 50000/–<br>அடிப்படைச் சம்பளம் ரூ.15700/– | 1 | பத்தாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 2 | அலுவலக உதவியாளர் | PAY MATRIX – 12<br>11600/– to 36800/–<br>அடிப்படைச் சம்பளம் ரூ.11600/– | 1 | எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையானதாக அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 3 | மடப்பள்ளி | PAY MATRIX – 12<br>11600/– to 36800/–<br>அடிப்படைச் சம்பளம் ரூ.11600/– | 1 | 1. தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்; 2.அற நிறுவனங்களின் வழக்கங்களுக்கேற்ப நெய்வேத்தியம் மற்றும் பிரசாதம் தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| 4 | காவலர் | PAY MATRIX – 12<br>11600/– to 36800/–<br>அடிப்படைச் சம்பளம் ரூ.11600/– | 1 | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| 5 | திருவலகு | PAY MATRIX – 12<br>11600/– to 36800/–<br>அடிப்படைச் சம்பளம் ரூ.11600/– | 1 | தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| | | கூடுதல் | 5 | |

விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பணியிட விவரங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை vadapalaniandavar.hrce.tn.gov.in மற்றும் hrce.tn.gov.in ஆகிய இணையதளங்களிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் துணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை–26 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட **விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 19.07.2025 அன்று மாலை 5.45 மணி வரை** மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**தக்கார்** **துணை ஆணையர்/செயல் அலுவலர்**

# விண்ணப்பப் படிவம்

பெயர் :

: புகைப்படம்

முகவரி

கல்வித் தகுதி :
(சான்று இணைக்கப்பட வேண்டும்)
பிறந்ததேதி/வயது :

சாதி :
(சான்று இணைக்கப்பட வேண்டும்)
இதர தகுதிகள் விவரம் :

தொலைப்பேசி / கைப்பேசிஎண் :

விண்ணப்பிக்கும் பணியின் பெயர் :
(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக
விண்ணப்பிக்க வேண்டும்)
மருத்துவச் சான்று :
(நகல் இணைக்கப்பட வேண்டும்)
காவல் துறைச் சான்று :
(நகல் இணைக்கப்பட வேண்டும்)

இடம்:
நாள்: விண்ணப்பதாரர் கையொப்பம்

இணைப்புகள்

1. கல்வித் தகுதிச் சான்றின் நகல்கள் [மாற்றுச் சான்றிதழ் & மதிப்பெண் பட்டியல் (Tc & Marklist)]
2. சாதிச் சான்றிதழின் நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
3. குடும்ப அட்டையின் நகல்
4. ஆதார் நகல்
5. சுயவிலாசமிடப்பட்ட ரூ.25/-க்கான தபால் தலையுடன் கூடிய உறை.

**<u>நிபந்தனைகள்</u>**

| | |
|---|---|
| 1. | திருக்கோயில் மூலம் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். துணைஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயில், வடபழநி, சென்னை-26 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை "vadapalaniandavar.hrce.tn.gov.in" , "hrce.tn.gov.in" ஆகிய இணையதளங்களிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விவரங்களுக்கான கல்வித்தகுதி, வயது வரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டு விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். |
| 2. | விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். |
| 3. | விண்ணப்பதாரர்கள் தமிழில் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மேலும் <u>இந்து மதத்தைச் சார்ந்தவராகவும் இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.</u> |
| 4. | விண்ணப்பத்துடன் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்குச் சான்றிட்ட ஒளிப்படிகளை (Xerox) மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ்களை எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது. அசல் சான்றிதழ்களை நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 5. | விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் உடல்தகுதிச் சான்று பெற்று அதன் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். அனைத்துப் பணியிடங்களுக்கும் கூடுதலாகக் காவல்துறை சான்றிதழும் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். |
| 6. | மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலில் காலகாலமாகப் பின்பற்றிப் பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| 7. | நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பாற்றவோ பிணையில் (ஜாமீனில்) கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்ட கடனைத் தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசுப் பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும், திருக்கோயில்களிலிருந்தும் விலக்கப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவர்கள். |
| 8. | இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் காணும் பணியிடங்கள் இத்திருக்கோயிலின் பராம்பரியம் மற்றும் நடைமுறையில் உள்ள பணியிடங்கள் என்பதால், அதனடிப்படையில் பணியிடங்களுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்.15.07.2025, அன்று மாலை 5.45 மணிவரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |
| 9. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பதிவு அஞ்சலில் ஒப்புதல் அட்டையுடன் மட்டுமே அனுப்பவேண்டும். |
| 10. | நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்குப் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது. மேலும், தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். |
| 11. | பூர்த்தி செய்து திருக்கோயிலுக்கு வரப்பெறும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கான அறிவிப்பு அனுப்பப்படும். |
| 12. | பணி நியமனம் அரசாணைஎண்.114, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-1) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது. (பதிவிறக்கம் செய்து அறியவும்) |

ல.ஆதிமூலம்
தக்கார்

இரா.ஹரிஹரன்
துணைஆணையர்/செயல்அலுவலர்